**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 15.12.2021 புதன் கிழமை

OS.No.724/2018 PW1: ராஜேந்திரன்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சர்வே எண். 85/11-ல் கட்டுப்பட்ட 53 செண்ட்டில் கிழக்கு பக்கம் உள்ள 24 செண்ட் 1971ம் வருடத்திலேயே கோபால் முத்திரையர் வசம் சென்றுவிட்டது என்றும் மேற்கு பக்கம் உள்ள 29 செண்ட் நல்லுமுப்பன் - மருதாயி தம்பதியினரின் மகன் 1ம் பிரதிவாதியிடம் இருந்து 2ம் பிரதிவாதி நரேஷ் குமாருக்கு வந்தடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட 53 செண்ட் நிலமும் என் கைவசம் தான் உள்ளது. சர்வே எண். 85/11 மற்றும் அதன் அருகில் உள்ள சர்வே எண். 85/1 முதல் 85/23, சர்வே எண். 86/1 முதல் 86/4, சர்வே எண். 90/1 முதல் 90/7, சர்வே எண். 91/1 முதல் 91/13 , சர்வே எண். 92/1 முதல் 92/6, 92/7 ஏ, 92/9 பி, சர்வே எண். 92/10 முதல் 92/16, சர்வே எண். 92/20 ஏ மற்றும் 92/21 பி ஆகிய புல எண்களில் கட்டுப்பட்ட நிலங்களை ஒன்று சேர்த்து ஸ்ரீ ராகவேந்திரா ஹைவே பார்க் என்ற பெயரில் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி, ஒரு அமுதா ஆகியோர் மற்றும் 18 நபர்கள் சேர்ந்து வீட்டு மனைகளாக பிரித்து லே அவுட் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் லே அவுட் எதுவும் போடவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும் மேற்படி சொத்துக்களில் லே அவுட் போடப்பட்டுள்ளதா என்று நான் பார்க்கவில்லை. அந்த லே அவுட் 1/2008, 2/2008, 25/2008 முதல் 63/2008 வரையிலான அனுமதி மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. அந்த லே அவுட்டுக்களில் பொது இடங்கள் மற்றும் சாலைகளை சமயபுரம் பஞ்சாயத்திற்கு 24.11.2008 மற்றும் 07.08.2009 தேதிகளில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 2ம் பிரதிவாதி ஒப்படைத்துள்ளார் என்று சொன்னாலும் அதுபற்றியும் எனக்கு தெரியாது. மேற்படி சாலைகளும், பொது இடங்களும் சமயபுரம் பஞ்சாயத்தின் கட்டுப்பாட்டில் தற்போது இருந்து வருகிறது என்று சொன்னாலும் அதுபற்றியும் எனக்கு தெரியாது. சர்வே எண். 85/11-ல் மட்டும் மேற்படி லே அவுட்டில் மனை எண்கள். 320 முதல் 326, 313, 315 முதல் 319 மற்றும் 353, 354 ஆகிய மனை எண்கள் கட்டுப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. சர்வே எண். 85/11-ல் கட்டுப்பட்ட ஒரு வீட்டு மனையில் செல்வக்குமாரி என்பவர் மாடி வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி லே

அவுட்டுக்குள் சமயபுரம் பஞ்சாயத்தரால் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்காக கெட்டி மெத்தை கட்டிடம் கட்டுப்பட்டுள்ளதா என்றும் எனக்கு தெரியாது. அந்த அலுவலகத்திற்கு அருகிலேயே குடிநீர் தொட்டி கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் மேற்படி லே அவுட்டுக்குள் அதுபோன்ற குடிநீர் தொட்டி எதுவும் கட்டவில்லை. மேற்படி லே அவுட்டுக்குள் தார் சாலைகள் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. அந்த தார் சாலைகள் அருகே மின் கம்பங்கள் நடப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதா என்றும் எனக்கு தெரியாது. அந்த லே அவுட்டுக்குள் சுமார் 60 குடும்பங்கள் வீடு கட்டிகுடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. அந்த வீடுகளுக்கு மேற்படி குடிநீர் தொட்டியில் இருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னாலும்அதுபற்றியும் எனக்கு தெரியாது. சர்வே எண். 85/11-ற்குள் 23 அடி தென்வடல் அகல ரோடு ஒன்று 23 அடி அகல கிழமேல் ரோடு ஒன்றும் செல்கிறது என்று சொன்னால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. நான் மருதாயின் வாரிசு அல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்ததை காட்டுவதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன். அந்த பட்டாவை தவிர வேறு எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் பனையாடியானிடம் தாவா சொத்தை பொறுத்து பங்கு பிரித்து கொடுக்க கேட்கவில்லை. நாங்களும் பனையாடியானும் சொத்தை சேர்ந்தே அனுபவித்து வந்ததால் அதை பிரித்து கொள்வது சம்மந்தமாக எங்களுக்குள் பேச்சு எதுவும் எழவில்லை. வெங்கடேசுக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நரேஷ்குமார் என்பவரை எனக்கு தெரியாது. எங்களுடைய இடத்தை மோசடியாக அபகரித்தவர் தான் வெங்கடேஸ் ஆவார். மேற்படி வெங்கடேஸ் என்பவர் எங்களுடைய இடத்தில் தாவா வழக்கிற்கு முன்பு 4 ஆட்களை கூட்டி வந்து குழி தோண்டி எங்களுடைய இடத்தை அபகரித்தார். சுற்றியுள்ள இடத்தை வாங்கிவிட்டதால் அதை அளப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும் முட்களை அப்புறப்படுத்துவதாக என்னிடம் கூறினார். அதன் பிறகு அளந்து என்னுடைய இடத்தில் கல் ஊன்றிவிட்டார். மேற்படி வெங்கடேஸ் அமுதா கணவரா என்று எனக்கு தெரியாது. வெங்கடேசின் செயலுக்காக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. வெங்கடேஸ் எங்கள் இடத்தில் கல்லை ஊன்றிவிட்டு காவல்நிலையத்தில் எங்கள் மீது இடத்தின் அருகே வரக்கூடாது என்று புகார் கொடுத்துவிட்டார். அது குறித்து போலீசார் எங்களை விசாரிக்கவில்லை.

வெங்கடேசிடம் எங்களுடைய இடத்தில் நாங்கள் ஏன் வரக்கூடாது என்று நான் கேட்டேன். அதற்கு வெங்கடேஸ் அந்த இடத்தை அவர் வாங்கிவிட்டதாக கூறினார். எங்கள் இடத்தை யாரிடம் இருந்து வாங்கினீர்கள் என்று நான் கேட்கவில்லை. மேற்படி வெங்கடேஸ் என்னுடைய இடத்தில் கல் போட்ட விவரத்தையும் அந்த இடத்தை வாங்கிவிட்டதாக சொல்லும் விவரத்தை நான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். சர்வே எண். 85/11 நிலத்தை பொறுத்து எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அந்நியர்கள் என்று சொன்னாலும் அந்த சொத்துக்கும் வாதிகளாகிய எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. சர்வே எண். 85/11 நிலத்தை பொறுத்து எந்த காலத்திலும் எனது தகப்பனார் கோபாலோ வாதிகளாகிய நாங்களோ அனுபவித்தது இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. தற்போதும் வாதிகளாகிய எங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு அமுதாவையோ, நரேஷ்குமாரையோ நான் பார்த்தேனா என்று கேட்டால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது.